# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
# சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, வருடம் IV – 2022 (நிகழ்நிலை)

## மனித உரிமைகள் சட்டம்

(மூன்று மணித்தியாலங்கள்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

**மூன்று** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

1. சீலாந்து என்ற நாட்டின் மக்கள் அதிக பணவீக்கம் காரணமாக கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதுடன், நீண்ட கால ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையினை பதவிதுறக்குமாறு கோரி மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 31 மே 2022 அன்றைய தினம், சீலாந்துவினது நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றுகூடியதுடன், அந்த பகுதியை விட்டு வெளியேறுமாறு காவல்துறையினர் உத்தரவிட்டபோதிலும், அவர்கள் அதனை மதிக்கவில்லை. அதன்பின்னர், எந்தவித முன்னறிவிப்புமின்றி, காவல்துறையினர் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசியதனால், போராட்டக்காரர்கள் பாதைத்தடுப்புக்களைச் சேதப்படுத்தியும், காவல்துறையினர் மீது பல்வேறு பொருட்களை வீசியும் பதிலடி கொடுத்தனர். குழப்பமான கைகலப்பைத் தொடர்ந்து, அமால், கமால் நிஹால் மற்றும் கெட்டா ஆகியோர் உட்பட ஆர்ப்பாட்டக்காரர்கள் பலர் கைதுசெய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்டதற்கான காரணங்களை போராட்டக்காரர்கள் கேட்டபோது, 'நாங்கள் உங்களை அடிக்கும்போது அது உங்களுக்குத் தெரியவரும்' என்று காவல்துறையினர் சாதாரணமாக பதிலளித்தனர். போராட்டக்காரர்களின் கண்கள் கட்டப்பட்ட நிலையில், மறைமுக இடமொன்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டு 3 நாட்கள்வரை நீதிமன்றத்தில் ஆற்றுப்படுத்தப்படாமல் தடுத்துவைக்கப்பட்டனர். பிரபல பியானோ கலைஞரான அமாலை, சில குற்றங்களை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலத்தை வழங்கவில்லையானால் அவரது கைகள் துண்டிக்கப்படும் என்று காவல்துறையினர் அவரை மிரட்டினர். இத்தகைய 3 நாட்களில் தொழிற்சங்கத் தலைவரான நிஹாலுக்கு உணவெதுவும் வழங்கப்படவில்லையென்பதுடன், வழக்கறிஞரான கமால் காற்றோட்டம் இல்லாத இருட்டறையில் தனிமைப்படுத்தப்பட்டார். சட்ட ஆலோசனை வழங்குவதற்காக தனது சக கைதிகளைப் பார்க்க அனுமதிக்க வேண்டும் என்று கமால் கோரியபோதிலும், அவர் முழுநேர சிறையில் வைக்கப்பட்டமையினால், மருத்துவக் கவனிப்பைத் தேவைப்படுத்தும் மூச்சுத்திணறலும் அவருக்கு ஏற்பட்டது. ஊழல் அரசியல்வாதிகளை பழிவாங்க அழைப்பு விடுத்த கெட்டா, சமூக ஊடகங்களில் 'யார் பொறுப்புடைமையாளர்களோ, அவர்களுக்கு திருப்பிச்செலுத்த வேண்டும்' என்று எழுதினார். அமைச்சரவையின் அமைச்சர்கள் சிலரைக் குறிவைத்து குறிப்பிட்டதோர் இடத்தில் அவர் வெடிகுண்டுகளை வைத்ததாகவும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. கெட்டாவினது மனைவி மற்றும் குழந்தைகளை விசாரணை அறைக்கு காவல்துறையினர் அழைத்துவந்ததுடன், அவரது குழந்தைகளை துப்பாக்கிமுனையில் வைத்துக் கொண்டு, 'உண்மையைச் சொல்லுங்கள்' என்று கெட்டாவினை அவர்கள் வேண்டினர். தனது மனைவியின் புலம்பலைக்கேட்ட கெட்டா, வெடிமருந்துகள் வைக்கப்பட்டுள்ள இடத்தை தெரியப்படுத்துவதாக ஒப்புக்கொண்டதுடன், பின்னர் வெடிபொருட்களை காவல்துறையினர் கண்டுபிடித்து செயலிழக்கச்செய்தனர்.

   சீலாந்துவினது சட்ட முறைமைகள் மற்றும் அவர்களின் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகள் ஆகிய இரண்டும் இலங்கையினதை ஒத்ததாக இருப்பதாகக் கருதிக்கொண்டு, காவல்துறையினர் எடுத்த நடவடிக்கைகளின் சட்டபூர்வாந்தன்மையை நுணுக்கமாக ஆராய்க.

   (100 புள்ளிகள்)

2. ''அரசியல்மயமாக்கல், இரட்டைத் தரநிலைகள் மற்றும் உயர்தொழில்சார் மனப்பான்மையின்மை ஆகிய சார்த்துதல்கள் காரணமாக, (மனித உரிமைகள்) ஆணைக்குழுவானது அதன் நம்பகத் தன்மையை இழந்துவிட்டதாக கருத்துரையாளர்கள் பலரும் முடிவுசெய்வதற்கு வழிவகுத்ததுடன், அதன் தொழிற்பாட்டில் தொலைநோக்கான சீர்திருத்தங்களுக்கான அழைப்புக்கள் செய்யப்படுவதனையும் அது தூண்டியது.''

(*Philip Alston, 'Reconceiving the UN Human Rights Regime: Challenges Confronting the New UN Human Rights Council' (2006) 7 Melb J Int'l L 185, 187-88.)*

மேற்கூறிய பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு பதிலாக நிறுவப்பட்ட ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் வெற்றி குறித்து நுணுக்கமாகக் கருத்துரைசெய்க.

(100 புள்ளிகள்)

3. அலிமோனியா என்பது '*போலா*', '*மாலா*', '*தோலா*' மற்றும் '*க்ரியா*' ஆகிய நான்கு சமயங்களைக் கொண்டதோர் அரசாகும். அலிமோனியாவில் போலார்கள் பெரும்பான்மை சமயத்தவர் என்பதுடன், சினு-போலா என்பது போலா சமயத்திலிருந்து பிரிந்துள்ள ஒரு சிந்தனைக் கூறாகும். அலிமோனியா அரசு அரசியலமைப்பில் திருத்தங்கொண்டுவந்து, ''*போலாவை அரச சமயமாவதுடன், அதற்கு முதன்மைத்தானம் வழங்கப்படுதலும் வேண்டும். அதற்கிணங்க, போலா சமயத்தை பாதுகாத்து, பேணிவளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டுமென்பதுடன், ஏனைய எல்லா சமயங்களுக்கும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை உத்தரவாதஞ் செய்தல் வேண்டும்*''. மாலார்கள் மற்றும் டோலார்கள் ஆகியோர் முன்மொழியப்பட்ட அரசியலமைப்புத் திருத்தங் குறித்து தங்களது ஆட்சேபனைகளைத் தெரிவிக்கின்றனர். சினு-போலார்கள் தாம் ஒரு சிறுபான்மையினர் என்றும், போலார்கள் தமது சமய நம்பிக்கையின் வெளிப்பாட்டை அடக்குமுறைக்கு உட்படுத்துவார்கள் என்றும் தெரிவித்து, அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிராக நாடு தழுவிய போராட்டத்தை நடத்தினர். சினு-போலா ஆர்ப்பாட்டக்காரர்கள் அலிமோனியா அரசாங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு, போலார்களின் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ், போலார் குருமடங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதுடன், 'அடிப்படைவாத சிந்தனைத்துறப்பு' கல்வி அமர்வுகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். இதனிடையே, அலிமோனியாவிலுள்ள அரசு நிதியுதவியளிக்கும் அனைத்து பாடசாலைகளைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும், தமது சமயத்தைக் கவனத்திற்கொள்ளாமல், குறிப்பிட்ட போலார்களின் சீருடையை அணிந்துவருதலும், போலார்களின் சடங்குமுறை காலைநேர பிரார்த்தனைகளில் பங்கேற்கவும் வேண்டும் என்று தேவைப்படுத்தப்பட்டுள்ளனர். தோலார்கள் மற்றும் க்ரியார்கள் சிறுபான்மைச் சமயங்களாகக் கருதப்படுவதுடன், சமீபத்தில் அவர்களின் சமயத்தலைவர்கள் சமயக்கட்டளையொன்றை ஆக்குகின்றனர். அதாவது, எவரேனும் தமது சமய நடைமுறைகளை கைவிட்டால், அவ்வாறான பிரிவினை அல்லது தூரப்படுதலானது மரண தண்டனை விதிக்கப்படக்கூடியதொரு சமயக்குற்றமாகும் என்று தெரிவிக்கின்றது.

''சமய சுதந்திரத்தின் பாதுகாவலர்'' என்று அழைக்கப்படும் மனித உரிமைகள் அமைப்பொன்று, அலிமோனியாவிலுள்ள சமய சுதந்திரத்தைப் பாதுகாப்பது தொடர்பான நிலவரக் கட்டுரையை எழுதுமாறு உங்களைப் பணிக்கமர்த்தியுள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச தராதரங்கள் மற்றும் அரச கடப்பாடுகள் என்பவற்றின் பின்னணியில் உமது நிலவரக்கட்டுரையினை எழுதுக.

(100 புள்ளிகள்)

4. சபார்னியா என்ற குடியரசானது புதியதொரு காணிக் கொள்கையை அறிவித்ததுடன், அதன்கீழ் இன ஒதுக்கீட்டு முறைமையின் அடிப்படையில் தாழ்த்தப்பட்ட குடும்பங்களுக்கு அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்படும் என்று தெரிவிக்கின்றது. இக்காணிக் கொள்கையின் அடிப்படையில், 'குடும்பம்' என்ற வரையறையில் ஓரினச்சேர்க்கைத் திருமணம் விலக்கப்பட்டுள்ளது. சுதேசிய பழங்குடியினரான சுமாரியர்கள் சமூகத் தலைவர்கள், அவர்கள் மக்கள் தொகையில் 10 சதவீதம் மட்டுமே பிரதிநிதித்துவம் செய்வதால் அவர்கள் கொள்கையால் பின்தங்கியிருப்பதாக அறிவித்ததுடன், அவர்கள் தங்கள் பண்டைய பழக்கவழக்கங்களின்படி ஒரேபாலின திருமணங்களை அங்கீகரிக்கின்றனர். சபார்னியா அரசாங்கம் தேர்தல்கள் சட்டத்தில் ஒரு புதிய விதியை அறிமுகப்படுத்துவதற்கான தனது விருப்பத்தை அறிவித்தது: "ஒவ்வொரு குடிமகனும் தேர்தலில் தனது பெயரில் நிரந்தர வசிப்பிடத்தை வைத்திருக்கும் அல்லது அவர்களின் பெற்றொரின் பெயரில் உரிமையைப் பயன்படுத்த வேண்டும். ஏறக்குறைய பாதி சுமாரியர்கள் வேட்டையாடுபவர்களாக இருப்பதனால், தனியார் நிலங்களை வைத்திருக்காததால் முன்மொழியப்பட்ட சட்டத்தால் தாங்கள் பின்தங்கியிருப்பதாக சுமாரியர்கள் வாதிட்டனர். காணி அமைச்சுக்கு மனுவொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், சுமாரியர்கள் காணிக்கொள்கையை கேள்விக்குட்படுத்தினர். ஆனால், சபார்னியாவினது தேசிய மொழிகளில் ஒன்றல்லாத சுமாரியர்களின் தாய் மொழியில் அது எழுதப்பட்டிருந்தமையினால், அவர்களின் முறைப்பாடானது அரச அதிகாரிகளினால் நிராகரிக்கப்பட்டது.

சபார்னியாவானது அனைத்து முக்கிய சர்வதேச மனித உரிமைகள் சாதனங்களுக்கு ஓர் அரசுத்தரப்பு என்று கருதிக்கொண்டு, இச்சட்டம் மற்றும் கொள்கை மறுசீரமைப்புக்களைப் பகுப்பாய்வு செய்து, சுருக்கமான மனித உரிமைகள் அறிக்கையொன்றினை எழுதுக.

(100 புள்ளிகள்)

5. இலங்கையில் *கருத்துவெளியீட்டுச் சுதந்திரம்* தொடர்பான, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவில் நீங்களும் ஓர் அங்கத்தவர் என்று கருதிக்கொள்க. இலங்கையில் கருத்துவெளியீட்டுச் சுதந்திரம் மற்றும் தொடர்புபட்ட உரிமைகளின் பாதுகாப்பின் நிலைமையை மதிப்பீடு செய்யுமாறு நீங்கள் வேண்டப்படுவதுடன், கடந்த 12 மாத காலப்பகுதியை உள்ளடக்கிய அறிக்கையொன்றினையும் தயாரித்தல் வேண்டும்.

நாட்டில் மனித உரிமைகள் பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய நிகழ்வுகளாக நீங்கள் கருதும் **குறைந்தது நான்கு (04)** உதாரணங்களை உங்களது அறிக்கை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(100 புள்ளிகள்)

6. **(அ)** மற்றும் **(ஆ)** ஆகிய **இரண்டுக்கும்** விடைதருக.

(அ) சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயத்தின் (CRC) கீழ் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையானதொரு உரிமையினைத் தேர்ந்தெடுத்து, இலங்கையில் அந்த உரிமையின் தற்போதைய நிலைமையினை நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்து சர்வதேசச் சட்ட சஞ்சிகையொன்றுக்கு கட்டுரையொன்றை எழுதுக. அக்கட்டுரையில், சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயத்தில் பாதுகாப்பளிக்கப்பட்டுள்ள முக்கிய கோட்பாடுகளின் பின்னணியில் குறைந்தது இரண்டு உதாரணங்கள் தந்து ஆராயுமாறு நீர் வேண்டப்படுகின்றீர்.

(ஆ) பெண்களுக்கெதிரான அனைத்துவகை ஓரங்காட்டல்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயத்தின் (CEDAW) கீழ் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையானதொரு உரிமையினைத் தேர்ந்தெடுத்து, தெற்காசியாவின் பின்னணியில் தேர்ந்தெடுக்கப்பட்ட உரிமையின் சமகால நிலைமையினை நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்து ஒரு சர்வதேசச் சட்ட சஞ்சிகையொன்றுக்கு கட்டுரையொன்றை எழுதுக. அக்கட்டுரையில், பெண்களுக்கெதிரான அனைத்துவகை ஓரங்காட்டல்களையும் இல்லாதொழிப்பதற்கான சமவாயத்தில் பாதுகாப்பளிக்கப்பட்டுள்ள முக்கிய கோட்பாடுகளின் பின்னணியில் குறைந்தது இரண்டு உதாரணங்கள் தந்து ஆராயுமாறு நீர் வேண்டப்படுகின்றீர்.

(ஒவ்வொரு பகுதிக்கும் 50 புள்ளிகள்)

******************************